1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கணக்கு, விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிரத்து கம்பனி 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகவுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமங்களிற்கான குறிப்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) LKAS 08- கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள் எனபவற்றின் பந்தி 42(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் கம்பியானது தவறாக ஏற்பட்டிருந்த அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பினரான விடயங்களிற்காக அனுமதிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் முதலாவது தொகுதியில் மீள குறிப்பிடுகின்ற முன்னை தவறுகளை பின்னோக்கி	ஒப்பந்த ஊழியரின் மாதாந்த சம்பளம் குறித்த காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட ஊழியர் சம்பளம் அட்டுறு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது.. இதன்படி 2024 ஆம் ஆண்டில் அத்தைக அங்கீகாரத்திற்கான தவறுகள் எதுவும் இருக்கவில்லை. வேவையின் ஏற்பாடின்மைக்காக	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

	சீராக்கப்பட வேண்டும் (அ) தவறாக ஏற்பட்டிருந்த முன்னைய காலம் சமர்ப்பிக்கப்பட்டதற்காக ஒப்பீட்டு தொகையை மீள குறிப்பிடுகின்ற, அல்லது (ஆ) முன்னரே முன்னைய காலம் சமர்ப்பிக்கப்பட முன்னர் தவறு ஏற்பட்டிருப்பின் முன்னரே முன்னைய காலம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பவற்றின் ஆரம்ப மீதி, மீளக் குறிபிடப்படுகின்றது. எவ்வாறாயினும், கம்பனியானது 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து திசெம்பர் வரைஎடுக்கப்பட்டிருக்காத காலப் பகுதிக்கான ஆலோசனை சேவைகளிற்காக ரூபா 749,275 தொகை அட்டுறு செலவாக இருந்தது. பின்னர் நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் முன்னைய ஆண்டுச் சீராக்கல் செய்யாமல் 2024 ஆண்டிற்கான ஏனைய வருமானமாக பதியப்பட்டிருந்தது. இதன் விளைவால் அதே தொகையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	உறுதிப்படுத்தல் அடிப்படையில் திரும்ப செய்யப்பட்டிருந்தது.	

1.5.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	05 ஆண்டு சேவைக்கால் பூர்த்தியாகாமல் கம்பனியிலிருந்து ஆறு (06) ஊழியர்கள் இராஜினாமா செய்திருந்ததுடன் 2023 ஆம் அண்டு வரை பணிக்கொடைக்கான ஏற்பாடாக ரூபா 486,135 செய்யப்பட்டிருந்தது. மேலும், தற்பொது கம்பனியில் சேவையிலில்லாத 03 ஊழியர்களிற்கு பணிக் கொடைக்கான ஏற்பாடு ரூபா 243,067 செய்யப்பட்டிருந்தது. இதன்படி, பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 243,067 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	அந்த இராஜினாமாக்கள் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்தற்கு முன்னர் கம்பனிக்கு முறையாக தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.	கம்பனியானது பணிக் கொடை ஏற்பாட்டினை சீராக்கப்பட வேண்டும்.
(ஆ)	கம்பனி நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், விற்பனை கிரய கணக்கில் பெறப்பட்ட	இதன்படி சீராக்கல் செய்யப்பட வேண்டும்.	செலுத்த வேண்டிய APIT நிதிக்கூற்றுக்களில் அங்கீகாரம் செய்யப்பட

	ஊழியத்திற்கு அப்பால் சம்பளங்கள் மற்றும் படிகளை அனுமதித்திருந்தது. எவ்வாறாயினும் ரூபா 875,835 தொகையான மேற்குறித்த சம்பளத்தில் செலுத்த வேண்டிய APIT ஐ கணக்கேடுகளில் அனுமதித்திருக்கவில்லை. இதன் விளைவால் ஆண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு செலுத்த வேண்டிய APIT அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.		வேண்டும்.
(இ)	கம்பனி நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், வருமான வரிக்கான ஏற்பாடு ரூபா 3,306,616 ஆக இருந்தது. எவ்வாறாயினும், 2024/2025 வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக வருமான வரி கணிப்பிடும் போது ரூபா 1,378,238 ஆன பணிக்கொடை ஏற்பாடு மேற்குறித்த வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக செலுத்தப்பட்ட பணிக் கொடையாக கழிக்கப்பட்டிருந்தது. இதன்படி வருமான வரிக்கான ஏற்பாடு 2024 ஆம் ஆண்டில் ரூபா 393,450 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	இது அறிக்கைகள் கோயைிடல் பரிசோதித்து சரியாக்கப்படஅ வேண்டும்.	வருமான வரி கணிப்பீடு செய்யும் போது பணிக்கொடை ஏற்பாடு சரியாக சீராக்கப்பட வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

விடயம்	தொகை ரூபா	கிடைக்கப்பெறாத சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பெறவேண்டிய WHT	84,949	WHT சான்றிதழ்	அண்மைய கடந்த ஆண்டிற்காக மாத்திரம் வழங்குவதற்கு வங்கி ஏற்றுக்கொண்டிருந்தது. தற்போது நாங்கள் இந்த மீதியை தெளிவுபடுத்தி பெறுவதற்கு சிறந்த மட்டத்தில் முயற்சிக்கின்றோம்.	WHT சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வருமான வரிக்கு எதிராக கோரப்பட வேண்டும்.

1.6 செலுத்தவேண்டிய கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு CEB இற்கு செலுத்த வெண்டிய ரூபா 11,791,191 தொகையான விற்பனை வரி மீதி (CEB இடமிருந்து பெறவேண்டிய சேகரிக்கப்பட்ட மிகை VAT) தீர்க்கப்படாமல் ஆறு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.	தற்பொது நிலவும் காசுப் பாய்ச்சலின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருமான வரிகளிற்கு எதிராக தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கியிருந்ததுடன் இது பின்னர் தீர்ப்பனவு செய்யப்படும்.	முறையான தீர்மானம் பெறுவதற்கு பணிப்பாளர் சபைக்கு பிரச்சனைகள் பற்றிய தகவல்களை முன்வைக்கப்பட வேண்டியதுடன் இதன்படி, செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியொழுப்பும் வரி அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கமை ரூபா 10,744,888 தொகையான CEB இடமிருந்து சேகரிக்கப்பட்ட செலுத்த வேண்டிய NBT ஐ ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.	தற்பொது நிலவும் காசுப் பாய்ச்சலின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருமான வரிகளிற்கு எதிராக தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கியிருந்ததுடன் இது பின்னர் தீர்ப்பனவு செய்யப்படும்.	முறையான தீர்மானம் பெறுவதற்கு பணிப்பாளர் சபைக்கு பிரச்சனைகள் பற்றிய தகவல்களை முன்வைக்கப்பட வேண்டியதுடன் இதன்படி, செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	ரூபா 220,000 தொகையான கணக்காய்வு கட்டணங்கள் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.	இது வருடாந்த நிதி பூர்த்தியாக்கலின் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடாக இருந்ததுடன் நாங்கள் தீர்ப்பதற்கு விலைப் பட்டியல் தேவைப்பட்டது.	முறையான தீர்மானம் பெறுவதற்கு பணிப்பாளர் சபைக்கு பிரச்சனைகள் பற்றிய தகவல்களை முன்வைக்கப்பட வேண்டியதுடன் இதன்படி, செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	இறுதி தாய் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய வியாபார மீதிகள் ரூபா 323,493 ஆன (இறுதி தாய் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டியது) எதிர்மறை மீதியுடன் ஒப்பீடு செய்யப்பட்டதுடன் ரூபா 139,998 ஆன (இறுதி தாய் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டியது) எதிர்மறை மீதி 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டது. எவ்வாறாயினும் அத்தகைய மீதி ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தவாறு எடுக்கப்பட வேண்டிய அல்லது சீராக்கப்பட வேண்டிய பதிவேடு அசையாத மீதியாக இருந்தது. முன்னைய ஆண்டு கணக்காய்வு இறுதயாக்கலின் கீழ் எர்ன்சட் மற்றும் ஐங்க ஆல் நாட்குறிப்பு இந்த மீதிகளை அனுமதித்தலுடன் தெளிவாக்கலிற்காக வெளிப்படுத்த வேண்டியிருந்தது.	முறையான தீர்மானம் பெறுவதற்கு பணிப்பாளர் சபைக்கு பிரச்சனைகள் பற்றிய தகவல்களை முன்வைக்கப்பட வேண்டியதுடன் இதன்படி, செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், வரி மதிப்பீட்டு ஆண்டு முடிவடைந்த பின்னர் நவம்பர் 30 அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பட்டியலுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வேறு ஏதாவது வேண்டப்பட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி சொல்லப்பட்ட அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கி 2017/2018, 2022/2023 மற்றும் 2023/2024 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான அறிக்கை தயாரித்திருக்கவில்லை. மேலும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39,845,069 செலுத்த வேண்டிய வருமான வரி கம்பனி ஆரம்பித்ததிலிருந்து செலுத்தப்படாமல் இருந்தது. மேலும் 2014/2015, 2015/2016 மற்றும் 2016/2017 வரி மதிப்பீட்டு ஆண்டுகள் தொடர்பில் ரூபா 29,065,844 ஆன குறை ஏற்பாடு மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிரந்தது. இதன் விளைவால் ரூபா 7,628,993 தொகையான ஆண்டிற்கான இலாபம் ரூபா 21,436,851 நட்டத்திற்கு மாற்றமடைந்திருந்தது.	தற்போது 2022/2023 மற்றும் 2023/2024 மதிப்பீட்டு ஆண்டிற்கான CIT அறிக்கை கோவையடல் செயற்பாட்டில் உள்ளன. CIT கணிப்பீடு இறுதியாக்கப் பட்டிருந்ததுடன் ஏற்கனவே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. கம்பனியானது செலுத்த வெண்டிய வருமான வரியின் தீர்ப்பனைவை குறிப்பிடப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்குள் இருபா 10 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது CIT அறிக்கை பிரகாரம் சீராக்கப்பட்டுள்ளது.	உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியயொழுக வேண்டும்.

1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய கூட்டு	தாய் கம்பனிக்கான இறுதியாக்கப்பட்ட உபாய	பாதீடுகள் தனிப்பட்ட ரீதியில் துணைநிலை	பாதீடு காலரீதியாக சமர்ப்பிக்கப்பட

	ஆளுகை மீதான வழிகாட்டல் மீதான 2.3 ஆம் பிரிவு மற்றும் 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 01/2021(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	திட்டங்கள், செயல் நடவடிக்கை திட்டங்கள் மற்றும் வருடாந்த பாதீடு என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு துணைநிலை கம்பனிகள் வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், தாய் கம்பனிக்கான செயல் நடவடிக்கை திட்டங்கள் மற்றும் வருடாந்த பாதீடு தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் கணக்காய்விற்கு போதிய ஆவணச் சான்றுகள் கிடைப்பதற்கு செய்ய்பபட்டிருக்கவில்லை.	கம்பனிகளிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவி ல்லை. தாய் நிறுவனம் மொத்த பாதீடாக அந்த பிரிவு தயாரிக்கின்றதுடன் 2024 ஆம் ஆண்டிற்கான அனுமதிக்கப்பட்ட பாதீடு ஏற்கனவே கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது.	வேண்டியதுடன் உரிய காலப்பகுதியில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ப்பதற்கு துணைநிலை கம்பனிகள் வேண்டப்பட்டது.
(ஆ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் III ஆம் பகுதி	இந்த அதிகாரச் சட்டத்தின் கீழ் செலுத்த வெண்டிய ஏதாவது பங்களிப்புகள் உரிய நேரத்தில் நிதியத்திற்கு செலுத்தப் பட்டிருக்காததுடன் ஊழியர் அத்தகைய பங்களப்பகள் அவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்ததென சபையின் திருப்திக்கு விளக்கமளிக் இயலாதிருந்தது. அவர் அத்தகைய கணிபீட்டுத் தொகை, அத்தகைய தொகை மீதான மிகை அறவீட்டிற்கு மேலதிகமானது நிதியத்திற்கு செலுத்துவதற்கு இயலாதிருந்தது. எவ்வாறாயினும் கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 88,221 தொகையான ETF மீதாக மிகை அறவீடு கொடுப்பனவிலுள்ள தாமதம் காரணமாக கம்பனியால் செலுத்தப்பட்டது.	பொதுவாக செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF உரிய நேரத்தில் தீர்க்கப்பட்டதுடன் மேலும் தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய நேரத்தில் தீர்க்கப்பதற்கு எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 10,935,609 இலாமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 4,513,102 (மீள குறிப்பிடப்பட்ட) ஆகும். ஆகவே, நிதிசார் விளைவுகில் ரூபா 6,422,507 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் நிதி மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக உள்ளது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

வருமானம் / செலவினம்	**2024 ரூபா**	**2023 (மீளகுறிப்பிடப்பட்டது) ரூபா**	**அதிகரிப்பு /(வீழ்ச்சி) ரூபா**	**சதவீதம் (%)**
வருமானம்	146,524,865	103,432,648	43,092,217	41.6
விற்பனைக் கிரயம்	130,575,675	93,046,563	37,529,112	40.3
நிர்வாகச் செலவினம்	5,916,305	5,904,595	11,710	0.19
நிதழச் செலவினம்	30,360	6,210	24,150	389
நிதி வருமானம்	153,809	37,821	115,988	307
ஏனைய வருமானம்	779,275	-	779,275	100

2.3 விகிதப் பகுப்பாய்வு

விகிதங்கள்	**2024**	**2023**
முலதனத்திற்கான வருவாய் (%)	9.30	3.25
மொத்த இலாப வீதம் (%)	10.88	10.04
தேறிய இலாப வீதம் (%)	-14.63	3.86

நடைமுறை விகிதம் (தடவைகள்)	2.59	3.91